1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

O.S.No. 227/2019

2025 வது ஆண்டு டிசம்பர் மாதம் 17 ம் நாள் வா.சா.1 ன் சாட்சிய வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. முத்து ஆனந்தன் | வட்டம் | திருநெல்வேலி |
| க.பெ /த.பெ | திரு. பெருமாள் பல்லவராயர் | கிராமம் | டவுண் |
| வயது | 73 | | |

17.12.2025 முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் 3 ம் வாதி ஆவேன். இந்த வழக்கு விபரங்கள் எனக்கு தெரியும். எனது முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

| | | | |
|---|---|---|---|
| 1 | 07.07.1931 | உயில் ஆவணம் சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.1 |
| 2 | 23.06.1976 | பாக பிரிவினை உடன்படிக்கை சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.2 |
| 3 | 11.07.2012 | அ.வ.எண். 294/2006-ன் தீரப்புரை நீதிமன்ற சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.3 |
| 4 | 11.07.2012 | அ.வ.எண். 294/2006-ன் தீரப்பாணை நீதிமன்ற சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.4 |
| 5 | 27.02.2013 | மேல்முறையீட்டு வழக்கு எண் 117/2012-ன் தீர்ப்பு சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.5 |
| 6 | 27.02.2013 | மேல்முறையீட்டு வழக்கு எண் 117/2012-ன் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.6 |
| 7 | 17.07.2018 | வழக்கு அறிவிப்பு அலுவலக நகல், அஞ்சல் ஒப்புகை அட்டை அசலுடன் | வா.சா.ஆ.7 |
| 8 | 27.07.2018 | பதில் அறிவிப்பு | வா.சா.ஆ.8 |
| 9 | | டவுண் சர்வே ரிஜிஸ்டர் கணிணி பதிவிறக்க நகல் | வா.சா.ஆ.9 |
| 10 | | புது அம்மன் கோவில் பெயரிலான பான் கார்டு அசல் | வா.சா.ஆ.10 |
| 11 | 15.07.2011 | சிட்டா உண்மை நகல் | வா.சா.ஆ.11 |
| 12 | 15.02.2011 | சிட்டா உண்மை நகல் | வா.சா.ஆ.12 |
| 13 | 15.02.2011 | சிட்டா உண்மை நகல் | வா.சா.ஆ.13 |
| 14 | | தீர்வை ரசீது அசல் (2 எண்ணம்) | வா.சா.ஆ.14 |

| | | | |
|---|---|---|---|
| 15 | | தீர்வை ரசீதுகள் அசல் (14 எண்ணம்) | வ.சா.ஆ. 15 |
| 16 | 13.06.2019 | புகார் மனு அலுவலக நகல் | வா.சா.ஆ.16 |
| 17 | | அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் | வா.சா.ஆ.17 |
| 18 | 20.05.2016 | தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவல் மற்றும் அடங்கல் | வா.சா.ஆ.18 |

வாதி தரப்பில் வேண்டுகோளுக்கு இணங்க மேலும் ஆவணங்கள் தாக்கல் செய்ய முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

upload on 05.12.2025

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2025.12.18 18:32:42 +0530

1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

, திருநெல்வேலி

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

O.S.354/2023

13.11.2025 பி.வா.சா.1 திரு. செந்தில்கண்ணன்

(1969ம் ஆண்டு 54 வது விதியின் 9வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. தாவா சொத்து எனது தந்தைக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தில் வாரிசு உரிமை படி எனது தகப்பனாரின் வாரிசுகளான எனது தாயார், சகோதரர் சகோதரிகளுக்கு உரிமை உள்ளது என்றால் சரிதான். 2013 எங்கள் குடும்பத்திற்குள் எனது தகப்பனாரின் சகோதரர் குடும்பத்தரும் நாங்களும் ஏற்படுத்திக்கொண்ட பத்திரப்படி எனது சகோதரிகளுக்கு எந்த ஒரு பாகமும் ஒதுக்கவில்லை என்றால் அவர்களின் திருமணத்தின்போது நான் செலவு செய்ததால் அவர்களுக்கு பாகம் ஒதுக்கவில்லை. அந்த பி.வா.சா.ஆ.2 பாக பத்திரப்படி எனது தம்பிக்கும் உரிமையுள்ளது என்றால் தாயாருக்கும், தம்பிக்கும் உரிமையுள்ளது. பி.வா.சா.ஆ.2 ஆவணம் எழுதப்பட்ட தேதிக்குள் வீடு கட்டுமானம் செய்தோம் என்றால் சரிதான். கட்டுமான அனுமதி 1ம் பிரதிவாதி மற்றும் எனது பெயரில் உள்ளது என்றால் சரிதான். வீட்டின் தீர்வை மற்றும் மின் இணைப்பு ஆகியவை 1ம் பிரதிவாதி மற்றும் எனது பெயரில் இருந்தது என்றால் சரிதான்.

2. தாவா சொத்து 1ம் பிரதிவாதி மற்றும் என் பெயரில் இருந்ததால் தான் கட்டிட ஆவணங்கள் இரு பெயரிலும் இருந்தது என்றால் ஆவணங்கள் இருவர் பெயரிலும் இருந்தது அதற்கான செலவை நான் தான் செய்தேன். கட்டுமான பொருட்களுக்கான ரசீது மற்றும் ஒப்பந்தம் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்யலாம். பிராது தபசில் வீட்டை எனது பெயருக்கு எழுதி தருவதாக 1ம் பிரதிவாதி எப்போது வாய்மொழி ஒப்பந்தம் செய்தார் என்றால் எனது தகப்பனார் இறந்த பின்பு 2007ம் ஆண்டு கூறினார். 2013ம் ஆண்டு பாக பிரிவினை ஏற்பட்டபோது வாய்மொழி ஒப்பந்தத்தை நிறைவேற்றும் வகையில் 1ம் பிரதிவாதி ஏன் அவரது சொத்தைப்பொறுத்து எனது பெயருக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்றால் குடும்பத்தில் மூத்தவர் என்ற முறையில் 1ம் பிரதிவாதி நல்ல நிலைமைக்கு வந்த

பின்பு எழுதிக்கொடுப்பார் என்று எண்ணத்தில் பாக பிரிவினையின் போது எழுதவில்லை.

3. கூட்டு சொத்தில் தனிப்பட்ட முறையில் கட்டுமானம் ஏற்படுத்தும் போது இது போன் தாவாக்கல் எழும் என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ. 3 ஆவணம் வாதியின் தாயாருக்கும், 1ம் பிரதிவாதிக்கும் குடும்ப பிரச்சனை ஏற்பட்ட பின்பு ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 23.11.2022ல் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதன். அதற்கு முன்பாக வாதியின் தாயார் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தனது குடுமப பிரச்சனை காரணமாக 11.10.2022ல் என் மீதும் 1ம் பிரதிவாதி மீதும் புகார் கொடுத்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 1ம் பிரதிவாதியுடன் சேர்ந்து வாழ வேண்டுமென்று வாதியின் தாயார் குடும்ப நல நீதிமன்றத்தில் HMOP. 429/2022 வழக்கினை 14.11.2022 அன்று மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

4. வாதியையும், வாதியின் தாயாரையும் கஷ்ட நஷ்ட படுத்த வேண்டும் நோக்கத்தோடு செட்டில்மெண்ட் ஆவணத்தை 1ம் பிரதிவாதி எனது பெயருக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அதன் பின்பு தான் நான் வாதியையும் அவரது தாயாரையும் பிராது தபசில் வீட்டை விட்டு வெளியேற்றினேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ஏற்பட்ட பின்பு 02.12.2022ம் மாலை 7 மணிக்கு வாதியை அவரது தாயார் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றிருந்தபோது வீட்டில் ஆள் இல்லாததை சாதகமாக பயன்படுத்தி வீட்டை பூட்டிச்சென்றது தொடரப்பாக மேலப்பாளையம் காவல் நிலையத்தில் வாதியின் தாயாரால் புகார் மனு கொடுக்கப்பட்டு அவருக்கு மனு ரசீது வழங்கப்பட்டது என்றால் சரியல்ல, வாதியின் தாயாரை வீட்டை விட்டு வெளியேற்றினேன் என்று கூறுவது சரியல்ல. வீடு எனது அனுபவத்தில் உள்ளது.

5. பி.வா.சா.ஆ.3ல் கூட்டு அனுபவத்தில் உள்ளதாக குறிப்பிட்டு தான் 1ம் பிரதிவாதி எனக்கு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனது அனுபவத்தில் இருப்பதாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நானும் 1ம் பிரதிவாதியும் எனது குடும்பத்தாரும் வாதியின் தாயாருக்கு எதிராக செய்த குடும்ப வன்முறைக்காக அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் குற்ற எண் 19/2022 பதிவு செய்யப்பட்டு

நிலுவையில் உள்ளது என்றால் உயர் நீதிமன்றத்தில் அந்த குற்ற வழக்கு உயர் நீதிமன்றத்தில் தள்ளுபடி ஆனது. அந்த வழக்கு 1ம் பிரதிவாதி எதிராக தள்ளுபடி செய்யப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. வாதியின் தாயாருக்கும் 1ம் பிரதிவாதிக்கும் திருமண ஏற்பாடுகள் நான் தான் செய்தேன். திருமணம் ஏற்பாடு செய்தபோது பிராது தபசில் வீடு 1ம் பிரதிவாதிக்கும் எனக்கும் பொதுவான வீடு என்று கூறினோம் என்றால் சரியல்ல.

6. எனவே வாதியின் தாயார் திருமணம் முடிந்த பின்பு தாவா வீட்டிற்கு வந்து தங்கியிருந்தார் என்றால் தம்பி எனது பாராமரிப்பில் இருந்ததாலும் அவர் சென்னையில் வேலைப்பார்த்ததால் எனது வீட்டில் திருமணம் நடைபெற்றதால் எனது வீட்டில் திருமணம் முடிந்த பின்பு 1 வாரம் இருந்தார்கள். பி.வா.சா.ஆ.3 ஆவணம் வாதியையும் வாதியின் தாயாரையும் வீட்டை விட்டு அப்புறப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல, வாதியோ வாதியின் தாயாரோ எந்த காலத்திலும் வசித்தது இல்லை. மேற்படி பி.வா.சா.ஆ.3 ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல.

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

O.S.247/2023

13.11.2025 பி.வா.சா.1 திரு. மாயகூத்தன்

(1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை (தொடர்ச்சி)

1. எனது கிரைய ஆவணத்தையோ காவல் நிலையத்தில் கொடுத்த புகாரையோ இந்த வழக்கில் தாக்கல் செய்தால் நான் செய்யும் ஏமாறும் வேலை தெரிந்து விடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு கிழக்கு பக்கம் வாதியின் வீட்டிற்கு மேற்கு பக்கம் வாதியால் கட்டப்பட்ட காம்பவுண்ட் 2 அடி சுவர் கட்டினேன் என்றால் எனது வீட்டில் தான் கட்டியுள்ளேன் வாதியின் சுவரில் கட்டவில்லை. எனது வீட்டிற்குள் கட்டியுள்ள 50 அடி நீளம் உள்ள சுவர் 2 அடி நீளம் மட்டும் என் வீட்டிற்குள் கட்டியுள்ளேன் வாதியின் சுவற்றிற்கு மேல் 2 அடி உயரம் காம்பவுண்ட் சுவர் கட்டிவிட்டு தற்போது பொய்யாக கட்டவில்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. தென்வடல் சுவரை 2000 ம் ஆண்டில் கட்டினேன். 2018 ம் ஆண்டும் தென்வடல் சுவரை கட்டியுள்ளேன் என்றும் வழக்கிற்காக பொய்யாக 2000 ஆண்டில் சுவர் கட்டியதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

2. சுவர் கட்டும்போது பக்கத்து வீட்டில் உள்ளவர்கள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். பக்கத்து விட்டில் இசக்கி என்பவர் இரவு நேரத்தில் வாட்சுமேனாக இருந்தாரா என்றால் இருந்தார். அவர் எத்தனை வருடமாக வேலைப்பார்த்தார் என்று எனக்கு தெரியாது. 2018 செப்டம்பர் மாதம் சுவர் கடட்டியபோது வாதி வெளி நாட்டிற்கு சென்றிருந்தார் என்றால் என்னிடம் கூறிவிட்டு செல்லவில்லை. எனது தந்தை வாதி கட்டிய சுவருக்கு பணம் கொடுத்ததாக கூறினார். எந்த தேதியில் எவ்வளவு தொகை வாதிக்கு கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. பணம் கொடுத்ததற்கான ரசீது வாங்கவில்லை. எனது தந்தை பணம் கொடுத்திருந்தால் எந்த தேதியில் எவ்வளவு தொகை கொடுத்தேன் என்று கூறியிருப்பார் என்றும் வழக்கிற்காக பணம் கொடுத்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

3. வீடு கட்டுவதற்கு எனது தந்தை எவ்வளவு பணம் செலவு செய்தார் என்றால் நான் தான் செய்தேன். எனது அப்பா வீடு கட்டுவதற்கு ஒரு பைசா கூட செலவு செய்யவில்லை அதற்கு அவசியமும் இல்லை. வாதி வழக்கு அறிவிப்பு அனுப்பவில்லை. நான் பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 நோட்டீஸ் எனக்கு வந்த அறிவிப்பு தான். வா.சா.ஆ.8 க்கு நான் அனுப்பிய பதில் அறிவிப்பு தான். நிலத்தை வாங்க சென்றபோது கிழக்கு பக்கம் உள்ள காம்பவுண்ட் சுவர் இருந்ததா இல்லையா என்றால் இல்லை. நான் வாங்கிய சொத்தின் நீள அகலத்தை அளந்து பார்த்து தான் கிரையம் பெற்றேன். என் வீடு கட்டும்போது நான் திருச்சியில் வேலைப்பார்த்ததால் எனது அப்பா வீடு கட்டுமானத்தை மேற்பார்வை பார்த்தார் என்றால் சரியல்ல. எனது அப்பா எனக்காக அந்த இடத்திலிருந்து கட்டிட வேலையை மேற்பார்வையிட்டார் நான் வழக்கிற்காக பார்வையிடவில்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல.

4. நான் தாக்கல் செய்த நிரூபண வாக்கு மூலம் நான் சொல்லி தான் எழுதப்பட்டது என்றால் சரிதான். நிரூபண வாக்கு மூலத்தில் 12 பக்கத்தில் மேற்படி சுற்று சுவர் இருதரப்பினருக்கும் பொதுவான சுற்று சுவர் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.8–ல் கிரையத்தின் போதே மேற்படி சுவர் கட்டிய நிலையில் இருந்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான், சொத்தின் 3 பக்கமும் சுவர் இருந்தது யார் கட்டினார்கள் என்று தெரியாது. நான் வாதியின் நிலத்தை ஆக்கிரமிப்பாளர் என்றால் சரியல்ல. நான் வாதிக்கு சுவருக்கு பணம் கொடுக்காததால் வாதிக்கு மட்டுமே அந்த சுவர் பாத்தியம் என்றும் எனக்கு அந்த சுவரில் எந்த வித உரிமையும் இல்லை என்றால் அவர் அவரது இடத்தில் கட்டியுள்ளார் நான் என் இடத்தில் கட்டியுள்ளேன். வாதி கட்டிய சுவருக்கு வாதி உரிமையாளர் நான் கட்டிய சுவருக்கு நான் உரிமையாளர். வாதியின் இடத்தில் 2 அடி சுவர் கட்டி விட்டு என் இடத்தில் சுவர் கட்டியதாக பொய்யாக கூறுகிறேன் என்றும் வாதி கோரிய பரிகாரத்தை கொடுக்க நான் கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

2 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

O.S.No. 386/2006

2025 வது ஆண்டு அக்டோபர் மாதம் 13 ம் நாள் பி.வா.சா. ன் சாட்சிய வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. அருணாதேவி | வட்டம் | திருநெல்வேலி |
| க.பெ /த.பெ | திரு. திருமலை நம்பி (எ) குமார் | கிராமம் | சிந்துபூந்துறை |
| வயது | 50 | மதம் | |

13.10.2025 முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் 1 ம் பிரதிவாதியின் மனைவி ஆவேன். இந்த வழக்கு விபரங்கள் எனக்கு தெரியும். எனது முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

| | | | |
|---|---|---|---|
| 1 | | அ.வ.எண்.159/2006 வழக்குரை சான்றிட்ட நகல் | பி.வா.சா.ஆ.1 |
| 2 | | அ.வ.எண்.159/2006 எதிர் வழக்குரை சான்றிட்ட நகல் | பி.வா.சா.ஆ.2 |
| 3 | | அ.வ.எண்.159/2006 தீர்ப்புரை சான்றிட்ட நகல் | பி.வா.சா.ஆ.3 |
| 4 | | அ.வ.எண்.159/2006 தீர்ப்பாணை சான்றிட்ட நகல் | பி.வா.சா.ஆ.4 |

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க மேலும் ஆவணங்கள் தாக்கல் செய்த முதல் விசாரணைக்காக ஒத்திவை க்கப்படுகிறது)

2 <u>வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>

<u>O.S.384/2021</u>

11.09.2025 வா.சா.1 திரு. சிவபெருமாள்

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை (தொடர்ச்சி)</u>

1. வழக்கு தாக்கல் செய்ய விவரம் நான் தான் வழக்கறிஞருக்கு கூறினேன். வழக்கில் என்ன என்ன சொத்து என்ன என்ன சர்வே எண்கள் என்று தெரியுமா என்றால் தெரியும். 1ம் தபசில் சொத்தின் சர்வே எண் 201–ல் 35 சென்ட். 2 வது தபசில் சொத்தின் 1 மற்றும் 2 அயிட்டம் சொத்துகளின் சர்வே எண், அதன் அளவும் எனக்கு தெரியாது. பிராது தபசில் சொத்தில் 29 பேர்களுக்கு பங்கு உண்டு ஆனால் 9 பேர் 22 சென்டுக்கு பத்திரம் பதிவு செய்ததாலும் என்னுடைய பங்கையும் சேர்த்து பத்திரம் பதிவு செய்ததால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிராதில் தபசில் சொத்திற்கு எவ்வித பத்திரங்களும் என்னிடம் இல்லை என்றால் யாரிடமும் பத்திரம் இல்லை. நான் குடியிருக்கும் வீடு எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. எனது அப்பா பெயரில் உள்ளது. நான் குடியிருக்கும் வீடு பிராது தபசில் சொத்தின் விளையாட்டு மைதானத்திற்கு அருகில் உள்ளதா என்றால் 10 வீடு தள்ளி உள்ளது. விளையாட்டு மைதானத்திற்கு ஒட்டினார்போல் மேற்கு பக்கம் உள்ள வீடு யாருடைய பெயரில் உள்ளது என்றால் பெருமாள் என்பவர் பெயரில் உள்ளது.

2. மேற்படி பெருமாள் என்னுடன் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்யவில்லை. மேற்படி பெருமாளின் வீட்டிற்கு தெற்கு பக்கம் கிழமேல் தெரு உள்ளது என்றால் சரிதான். பெருமாள் எனது வகையாறாவை சேர்ந்தவர் என்றால் சரிதான். பிராது தபசில் சொத்தை நோக்கி பெருமாள் என்பவர் கிழக்கு பக்கம் வாசல் வைத்துள்ளார் என்றால் சரிதான். வாசல் பக்கத்தில் கோவில் அரை குறையாக ஒரு கோவில் கட்டப்பட்டுள்ளது என்றால் அது கோவில் அல்ல அது ஒரு அறை. மேற்படி அறை கோவில் நிர்வாகத்தால் கோவிலுக்காக கட்டப்பட்டது.மேற்படி அறை கட்டப்பட்டதால் தான் இரு மாதத்தவர்களிடையே பிரச்சனை ஏற்பட்டது என்றால் அறை கட்டப்பட்டதால் ஏற்படவில்லை பிரதிவாதிகள் வேலி அமைத்ததால் ஏற்பட்டது. பிராது தபசில் சொத்திற்கு வடபுறம் பொன்ராஜ் என்பவர் வீடு உள்ளது. அந்த வீட்டுடன் காலியிடமும் உள்ளது. பொன்ராஜ் இன்று என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளாரா என்றால்

வந்துள்ளார். பொன் ராஜ் இடத்திற்கும் தாவா இடத்திற்கும் இடையே தெரு உள்ளதா என்றால் இல்லை.

3. வாதிகளால் எங்களால் தெரு மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அங்கு தெரு இல்லை. பிராது தபசில் சொத்திற்கு கிழக்கு பக்கம் தென்வடலாக தெரு உள்ளது என்றால் சரிதான். தெருவிற்கு மேல் பக்கம் தாவா இடத்திற்கு கிழக்கு பக்கம் அரசு குடிநீர் தொட்டி அமைந்துள்ளது என்றால் சரிதான். தென்வடல் தெருவிற்கு எதிரில் சுப்பிரமணியன் வீடு உள்ளது. சுப்பிரமணியன் வீட்டிற்கு மேற்கு பக்கம் முத்து மணி என்பவர் வீடு உள்ளது. முத்துமணி என்பவர் வீட்டிற்கு மேற்கு பக்கம் பொன் ராஜ் வீடு உள்ளது. நான் கூறிய முத்துமணி மற்றும் சுப்பிரமணியன் ஆகியோர் இந்த வழக்கில் வாதிகள் அல்ல என்றால் சரிதான். பொன்ராஜ் என்பவருக்கு தெரு இல்லை என்பதால் தாவா இடத்தை பயன்படுத்துவதற்காகத்தான் என்னை தூண்டி இந்த வழக்கை தாக்கல் செய்ய வைத்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு தென் பக்கம் இந்துக்கள் கோவில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் தான் வாதிகளின் 5 பங்கு உள்ளது என்பதை காட்ட எந்தவித ஆவணமோ, பத்திரமோ உள்ளதா என்றால் கூட்டுபட்டாவில் என் பெயர் உள்ளது.

4. கூட்டு பட்டாவில் என்னுடைய இடம் எந்த பக்கம், எந்த திசையில் உள்ளது அறியமுடியாது என்றால் சரிதான். பிராதில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்திற்கு உரிய மறுபயனுக்கு தான் பள்ளிக்கூடத்திற்காக கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. எனவே கிரைய பத்திரத்தை செல்லாது என பரிகாரம் கோர சட்டப்படி அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய பங்கை பொறுத்து பிராது தபசில் சொத்தை யாருக்கும் இது வரை நான் கிரையம் கொடுக்கவில்லை. என்னுடைய பங்கைப்பொறுத்து வருவாய் துறையிலிருந்து சர்வேயர் மூலம் அளந்தேனா என்றால் இல்லை. பிராது தபசில் சொத்தை பொறுத்து பாக பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிராது தபசில் சொத்தை எத்தனை செண்ட் பள்ளிக்கூடத்திற்காக கிரையம் கொடுத்தார்கள் என்றால் 22 சென்ட் கொடுத்தார்கள். 22 சென்ட் போக மீதம் உள்ள இடத்தை யார் யார் அனுபவித்து வருகிறார்கள் என்றால் இந்து மதத்தை சாந்தவர்கள் அனுபவித்து வருகிறார்கள். நான் பிராது தபசில் சொத்தை அபகரிப்பதற்காக இரு மதத்தவரின் இடையே சட்டம் ஒழுங்கு பிரச்சனையை உண்டு பன்னி வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தான விளையாட்டு

மைதானத்தில் எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் பாக பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்யாமல் கிரைய ஆவணத்தை சட்டப்படியாக செல்லாது என விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

O.S.138/2023

11.09.2025 வா.சா.2 திரு. செந்தில்குமார்

2 முதல்4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வாதி எனது தகப்பனார் என்றால் சரிதான். எனவே அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த நிரூபண வாக்கு மூலத்திற்கு தகவல் சொன்னது எனது தகப்பனார் என்றால் சரிதான். வாதி எனது தகப்பனார் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் 10 வகுப்பு வரை படித்துள்ளேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு ஆவணங்கள் தமிழில் எழுத படிக்க தெரியும். வழக்கு சொத்து 1ம் பிரதிவாதி செல்லப்பாவிற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். என்ன பரகாரம் கேட்ட வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வழக்கு சொத்தை கிரையம் செய்து தர கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனது தந்தைக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே எழுத்து மூலமான ஒப்பந்தம் எதுவும் இல்லை, வாய்மொழியான ஒப்பந்தம் தான்உ ள்ளது. வாய்மொழி ஒப்பந்தம் தான் என நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு முன்னர் இந்த வழக்கு சொத்து கோபி பிள்ளைக்கு பாத்தியப்பட்டது. கோபி பிள்ளைக்கு எத்தனை வாரிசுகள் உள்ளார்கள் என்றால் 3 பெண் பிள்ளைகள், 1 ஆண் பிள்ளை. அவருக்கு இரு தாரம் உண்டு. 1ம் பிரதிவாதியின் மனைவி பெயர் ஜெயா என்றால் சரிதான். ஜெயாவிற்கு நிறைய நிலங்கள் உள்ளது என்றால் சரிதான்.

2 எனது ஊரில் உள்ள ஜெயாவின் நிலத்தில் நைனார், வேலாயுதம், இசக்கி, சேதுராமலிங்கம் ஆகியோர்கள் பயிர் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வரை எனது தந்தையும் 1ம் பிரதிவாதியும் நல்ல உறவு முறையில் தான் இருந்தார்கள் என்றால் சரிதான். நல்ல உறவு முறையில் இருந்த போது நைனார், வேலாயுதம், இசக்கி, சேதுராமலிங்கம் ஆகியோர்களிடமிருந்து கட்டுக்குத்தகை தொகை வாங்கி 1ம் பிரதிவாதியிடம்

கொடுத்து வந்தார் என்றால் சரியல்ல. எனது தந்தை 1ம் பிரதிவாதியிடம் கட்டுக்குத்தகையாக இருந்த விவசாயிகளிடம் தொகை வசூல் செய்து கொடுத்து வந்தார் என்றால் சரியல்ல. அதற்கு தனியாக எனது தந்தைக்கு சம்பளம் கொடுக்கப்பட்டு வந்தது என்றால் சரியல்ல. மேற்படி தொகை 1ம் பிரதிவாதியின் வங்கி கணக்கில் செலுத்தி விட்டு தற்போது வழக்கிற்காக கிரைய முன் பணம் என்று எனது தந்தைக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. நான் ரொக்கமாக 1ம் பிரதிவாதியிடம் ரூ.25,000/– செலுத்தியுள்ளதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது தந்தை தபசில் சொத்தை பயிர் செய்தார் என்பதை காட்ட எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். எனது தந்தைக்கும் 1ம் பிரதிவாதிக்கும் அவரது இடத்தில் வைக்கோல் படப்பு வைத்ததால் தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான், அதற்கு முன்பாகவே வைக்கோல் படப்பு எங்கள் அனுபவத்தில் தான் இருந்தது, கிழக்கு பக்கத்தில் உள்ள பாசன ஓடை 1ம் பிரதிவாதியின் சொந்த நிலத்திற்கு வருகிறது என்று அடைத்ததால் பிரச்சனை ஏற்பட்டது. பாசன ஓடையை அடைத்தது சம்பந்தமாக நானோ எனது தந்தையோ காவல் நிலையத்தில் புகார் அளித்தோமா என்றால் கொடுக்கவில்லை. 1ம் பிரதிவாதி தான் வைக்கோல் படப்பு சம்பந்தமாக 20.03.2023 அன்று காவல் நிலையத்தில் என் தந்தை மீதும், முருகன், துரை ஆகியோர்கள் மீது புகார் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி புகாரில் நானும் எனது தந்தையும் 21.03.2023 காவல் நிலையத்தில் ஆஜராகி நிலத்தை அளந்து பார்க்கலாம் என்று எனது அப்பா எழுதிக்கொடுத்த எழுத்து மூல வாக்கு மூலம் தான் என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 24.03.2023 அன்று எனது அப்பா 1ம் பிரதிவாதி முன்னிலையில் சர்வேயர் மூலம் அளக்கப்பட்டது என்றால் சரியல்ல. சர்வையர் அளந்ததிற்கு பின்பு ஆர்டிஓ விசாரணைக்கு அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. தாசில்தார் விசாரணைக்கு அனுப்பப்பட்டதா என்றால் அனுப்பப்பட்டது. நிலத்தை அளவீடு செய்ததற்கு பின்பு வைக்கோல் படப்பை அகற்ற வேண்டும் என்ற வட்டாட்சியர் உத்தரவுபிறப்பித்தார் என்றால் சரிதான். அந்த உத்தரவு தான் என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 ஆவணம். ஆனால் எனது தந்தை அதன் பின்பும் வைக்கோல் படப்பை அகற்றவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் மின் இணைப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். மின் இணைப்பு இல்லாமல் மின்

மோட்டார் இயக்க முடியுமா என்றால் முடியாது. ஆயில் மோட்டார் இயக்க முடியும். என்னுடைய நிரூபண வாக்கு மூலத்திற்கு நான் தான் தகவல் சொன்னேன் அதில் மின் மோட்டார் என்று தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது தந்தை கொடுத்த புகாரிலோ, நிரூபண வாக்கு மூலத்திலோ மின் மோட்டார் குறித்து கூறவில்லை என்றால் சரிதான். நான் எனது நிரூபண வாக்கு மூலத்தில் 18.09.2024 அன்று 1ம் பிரதிவாதி மீது புகார் கொடுத்தாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

5. 19.09.2024 அன்று 1ம் பிரதிவாதி எனது தந்தை மீதும் என் மீதும் புகார் அளித்தார் என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய புகாரின் புகார் ஏற்பு ரசீது எண் எனக்கு தெரியாது. நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். உரிமையியல் நீதிமன்றத்தில் பரகாரம் கோரு மாறு கூறி அந்த மனுவை முடித்து வைத்தார்கள் என்றால் சரிதான். 04.12.2024 அன்று வா.சா.ஆ. 8 புகார் கொடுத்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல, வா.சா.ஆ.8 ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்தில் எவ்வித மின் மோட்டார் எதுவும் இல்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது தந்தை தாக்கல் செய்துள்ள இடைகால மனுக்கள் தள்ளுபடி செய்த பின்பு 15.02.2024 தேதியில் தபசில் சொத்தில் வேலி அமைக்க முற்பட்டபோது நானும் எனது ஆட்களும் அதை தடுத்தோம் 1ம் பிரதிவாதி அவ்வாறு வேலி அமைக்க முற்படவில்லை. 1ம் பிரதிவாதி வேலி அமைக்க முற்பட்டதை நான் தடுத்து நிறுத்தினேன் என்றால் சரியல்ல. எனது தந்தை இந்த வழக்கை தாக்கல் செய்ய எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எனது தந்தை தாக்கல் செய்துள்ள வழக்கை தள்ளுபடி செய்து 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்கோரிகை அனுமதிக்க தக்கது என்றால் சரியல்ல.

2 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

O.S.No. 9/2024

2025 வது ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ம் நாள் வா.சா.3 ன் சாட்சிய வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. ஹைதர் அலி | வட்டம் | |
| க.பெ /த.பெ | திரு. ஜமால் | கிராமம் | மேலப்பாளையம் |
| வயது | 59 | மதம் | |

11.08.2025 முதல் விசாரணை

நான் இந்த வழக்கிற்கு 3 ம் நபர் ஆவேன். இந்த வழக்கு விபரங்கள் எனக்கு தெரியும். எனது முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

| | | | |
|---|---|---|---|
| | | ஹைதர் அலி என்பவரின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டுப்பார்த்து குறியீடு செய்யப்படுகிறது) | சா.சா.ஆ.1 |

2 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

O.S.No. 453/2023

2025 வது ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ம் நாள் பி.வா.சா.1 ன் சாட்சிய வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. ஸ்டாலின் கிறிஸ்டோபர் | வட்டம் | திருவட்டார் |
| க.பெ /த.பெ | திரு. தங்கராஜ் | கிராமம் | |
| வயது | 47 | மதம் | |

11.08.2025 முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் 2 ம் பிரதிவாதி ஆவேன். இந்த வழக்கு விபரங்கள் எனக்கு தெரியும். எனது முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

| | | | |
|---|---|---|---|
| 1 | 12.06.1990 | அரசாணை நகல் ஜெராக்ஸ் | பி.வா.சா.ஆ.1 |

( பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க மேலும் ஆவணங்கள் தாக்கல் செய்ய முதல் விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

O.S.No. /2023

11.09.2025 பி.வா.சா.1 திரு.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

O.S.No.465 /2023

12.07.2025 பி.வா.சா.1 திரு.ஹைதர் அலி

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. வாதிகள் தான் வழக்குச் சொத்தின் உரிமையாளர்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் மாத வாடகைரூ. 5500/-. 2023 ஆம் வருடம் அக்டோபர் மாதம் முடிய வாடகை செலுத்தியுள்ளேன். மாத வாடகையை ஒவ்வொரு மாதமும் வங்கி கணக்கில் செலுத்துவேன் என்றால் சரியல்ல நேரடியாக விஜயலட்சுமியிடம் கொடுப்பேன். இந்த வழக்கு நிலுவையில் உள்ள போது 1ம் தேதி எனக்கு வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பில் 01.11.2023 முதல் 31.10.2024 வரை உள்ள வாடகை பாக்கியை செலுத்த கோரப்பட்டு இருந்தது என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். வழக்கிற்கு பின்பு நான் வாடகை எதுவும் செலுத்தவில்லை என்றால் சரிதான். இன்று வரை 18 மாத வாடகை பாக்கி ரூ.99,000/- உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வழக்கறிஞர் அறிவிப்பு எனக்கு வாதி அனுப்பிய அறிவிப்பு என்றால் சரிதான். அந்த அறிவிப்பு வா.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. வாடகையை நான் வங்கி மூலம் செலுத்தினேனா என்றால் செலுத்தவில்லை கையில் தான் கொடுத்தேன். செப்டம்பர் மாத வாடகை05.10.2023 அன்று அக்டோபர் மாத வாடகை 06.11.2023 அன்று எனது மகன் இஸ்மாயில் மூலம் வங்கி கணக்கில் அனுப்பினேன் என்றால் எனக்கு தெரியாது எனது மகனுக்கு தான் தெரியும்.வாடகையை நான் தான் வாதிக்கு கொடுப்பேன் எனது மகன் கொடுக்க மாட்டார். எனது மகன் ஒவ்வொரு மாத வாடகையையும் 1 வது வாதி பேரில் உள்ள யூனியன் பாங்க் ஆப் இந்தியாவங்கி கணக்குக்கு அனுப்பி வருகிறார் என்றாலும் நான்1 வது வாதி நேரடியாக வாடகை கொடுப்பதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.எனது மகன் நீதிமன்ற முன்னிலையாகி சாட்சி அளிக்க தயாராக உள்ளார். விஜயலட்சுமி இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

3. ஹரி விக்னேஸ்வரனிடம் வாடகை கொடுத்துள்ளேனா என்றால்

கொடுத்துள்ளேன். அவர் ஹரி விக்னேஸ்வரனிடம் வாடகை கொடுத்துள்ளதற்கு என்னிடம் எந்த ஆதாரமும் இல்லை. நிரூபண வாக்கு மூலத்தில் உள்ள விபரம் எனக்கு தெரியும். என்னுடைய நிரூபண வாக்கு மூலத்தில் வாதிகள் வழக்கு சொத்தில் உரிமையாளர்கள் அல்ல என்று நான் கூறியுள்ளது தவறுதான். வாடகை செலுத்த நடவடிக்கை எடுத்து வருகிறேன் என்று எனது நிரூபண வாக்கு மூலத்தில் கூறியுள்ளேன் அவ்வாறு என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் தற்போதும் நடவடிக்கை எடுத்து வருகிறேன். வாடகை பாக்கி செலுத்த தயாராக உள்ளேன். அடுத்த வாய்தாவில் வாடகை பாக்கி செலுத்த தயாராக உள்ளேன்.தாவா சொத்தில் உள்ள கடையை நான் உள் வாடகைக்கு கொடுக்கவில்லை. நான் கடையை 10 மாதமாக பூட்டி வைத்திருந்தேன் எனக்கு உடல் நிலை சரியில்லாததால் அவ்வாறு பூட்டி வைத்திருந்தேன்.

4. கடையை பூட்டியதற்கு பின் நான் உள் வாடகைக்கு விட்டேன் என்றால் சரியல்ல. 2ம் வாதிக்கு சமீபத்தில் திருமணம் நடந்தது என்றால் எனக்கு தெரியாது. 2ம் வாதிக்கு அவரது சகோதரரான 1ம் வாதி தான் ஆதரவாக இருந்து வருகிறார் என்றால் சரிதான். வாதிகளின் பெற்றோர் ஏற்கனவே இறந்து விட்டார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து எந்தவித வாடகை ஒப்பந்தமும் எழுதப்படவில்லை என்றால் சரிதான். 1ம் வாதி கடையில் தொழில் செய்வதற்கு கேட்டார் நான் அதற்கு மறுப்பு தெரிவித்தேன்.எனக்கு இரண்டு மகன்கள், ஒரு மகள். என்னுடைய மூத்த மகன் திருநெல்வேலி ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார் 2வது மகன் சென்னையில் மர வியாபாரம் செய்து வருகிறார்.1ம் வாதிக்கு வியாபாரம் செய்ய கடை தேவைப்படுவதாலும் நான் வாடகை பாக்கி வைத்துள்ளதாலும் கடையை காலி செய்ய கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.வாதி கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல

வருவாய் துறை சுற்றறிக்கை எண்.9/2019ன் படி ஒருவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகள் இருந்தால் நீதிமன்றத்தின் மூலமே பரிகாரம் தேடிக்கொள்ளமுடியும் என்றால் சரியல்ல. நான் முறையான ஆவணங்கள் தாக்கல் செய்யாத காரணத்தினால் எனது மனுவை 2ம் பிரதிவாதி நிராகரித்தார் என்றால் சரியல்ல. வழக்கு பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

வருவாய் துறை சுற்றறிக்கை எண்.9/2019ன் படி தத்து எடுக்கப்பட்ட ஒருவருக்கு வாரிசு சான்றிதழ் பெற வேண்டும் என்றால் நீதிமன்றத்தின் மூலமே பரிகாரம் தேடிக்கொள்ளமுடியும் என்றால் சரியல்ல. நான் முறையான ஆவணங்கள் தாக்கல் செய்யாத காரணத்தினால் எனது மனுவை 3ம் பிரதிவாதி நிராகரித்தார் என்றால் சரியல்ல. வழக்கு பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

நான் --- கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்துள்ளது. அழைப்பாணையில் கண்டபடி,

நான் தாக்கல் செய்த வாரிசு சான்றிதழ் கோரிய விண்ணப்பம் எனது தந்தைக்கு இரண்டு மனைவிகள் என்ற காரணத்தாலும் நாங்கள் தகுந்த ஆவணங்கள் கொடுக்காததாலும் நிராகரிக்கப்பட்டது என்றால் சரிதான். வாரிசு சான்றிதழ் வேண்டும் எனில் உரிய ஆவணங்களுடன் சம்மந்தப்பட்ட வட்டாச்சியருக்கு இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க வேண்டும் என்றாலோ அது நிராகரிக்கப்பட்டால் வருவாய் கோட்டாச்சியரிடமும் அதன் பின்னிட்டு மாவட்ட வருவாய் அலுவலரிடமோ அதன் பின்னிட்டு மாவட்ட ஆட்சிதலைவரிடம் சீராய்வு மனு தாக்கல் செய்ய வேண்டும் என்றாலோ நேரடியாக வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றாலும் நான் கோரும் பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றாலும் சரியல்ல.

நான் ஏற்கனவே நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். கூடுதல் ஆவணம் தாக்கல் செய்ய மனு செய்து அது அனுமதிக்கப்பட்டு ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்.

2 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

O.S.No. 566/2014

2025 வது ஆண்டு நவம்பர் மாதம் 13 ம் நாள் பி.வா.சா.4 ன் சாட்சிய வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.பிரகாஷ் | வட்டம் | திருநெல்வேலி |
| க.பெ /த.பெ | திரு. நடராஜன் | கிராமம் | பெருமாள்புரம் |
| வயது | 49 | | |

13.11.2025 முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் 1 ம் பிரதிவாதி தரப்பு சாட்சி ஆவேன். இந்த வழக்கு விபரங்கள் எனக்கு தெரியும். எனது முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

| | | | |
|---|---|---|---|
| 1 | 13.05.2017 | சொத்தின் வழிகாட்டி மதிப்பு | பி.வா.சா.ஆ.16 |

(பிரதிவாதி மற்றும் வாதி தரப்பு வழக்கறிஞர்களின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவை க்கப்படுகிறது)

2 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

O.S.No. 47/2023

13.11.2025 வா.சா.1 முத்தையா

2025 வது ஆண்டு அக்டோபர் மாதம் 13 ம் நாள் வா.சா.1 ன் சாட்சிய வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

1) கோவில் நிர்வாகி மாடசாமி என்ற ஒருவர் உண்டா? என்றால் இல்லை. கலங்கரைன் மகன் முத்தையா நான் தான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடர்ந்தேன். நான் தாக்கல் செய்த வழக்கு WP 14478/2017 என்றால் சரிதான். அந்த வழக்கு யாருக்கு எதிராக தொடர்ந்தேன் என்றால் இந்த வழக்கின் பிரதிவாதியை 1 ம் எதிர்மனுதாரராக ரிட் மனுவில் கட்சி சேர்த்தேன். ரிட் மனுவில் 5 வது எதிர்மனுதாரர் முத்தையா மகன் ராமையா தேவர் என்றால் சரிதான். அவர் எங்கள் ஊரை சேர்ந்தவர் தான். அவரை நாங்கள் எதிர்மனுதாரராக சேர்க்கவில்லை. ரிட் மனுவில் நாங்கள் வேறு யாரையும் சேர்க்கவில்லை. இதே கோவில் நிர்வாகம் சம்பந்தமாக ஏற்கனவே இந்த வாதி கோவில் சார்பில் ரிட் மனு 14290/2017 என்ற ரிட் மனு மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்றால் தடங்கல் மனு தாக்கல் செய்தேன்.

2) அந்த தடங்கல் மனுவை பிரதிவாதிக்கு எதிராக மட்டுமே தாக்கல் செய்தோம். அந்த ரிட் மனுவில் அரசாங்கத்தையோ, வேறு யாரையோ கட்சி சேர்க்கவில்லை. ரிட் மனுவை யாரை வைத்து தாக்கல் செய்தேன் என்றால் வழக்கறிஞரை வைத்து தாக்கல் செய்தேன். அந்த வழக்கில் யார் மனு மனுதாரர் என்றால் நான் தான். மேற்படி வழக்கில் நான் மனுதாரர் இல்லை என்றும், மாடசாமி என்பவரை வைத்து நான் பின்புலத்தில் இருந்து வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. மேற்படி ரிட் மனுவும் கோவில் சம்பந்தப்பட்ட வழக்குதான் என்றால் சரிதான். அந்த வழக்கில் என்ன தீர்ப்பானது என்றால் எனது வழக்கறிஞர் திருநெல்வேலி நீதிமன்றத்தில் வழக்கை அனுப்பியுள்ளதாகவும் திருநெல்வேலி நீதிமன்றத்தில் வழக்கை நடத்த வேண்டும என்று கூறினார். அந்த ரிட் மனுவில் வாதி கோவிலுக்கு உரிமையோ, உடமையோ இருந்தால் விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்ய அறிவுறுத்தப்பட்டது என்றால் சரிதான்.

3) அந்த ரிட் மனுவின் உத்தரவுப்படி பிரதிவாதிக்கு எதிராக எந்த வழக்கும் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் சர்வே எண் 548/1. நாராணம்மாள்புரம் சரகம், பண்டாரக்குளம்

கிராமத்திற்குட்பட்டது. பிராது தபசில் சொத்தின் விஸ்தீரணம் 480 சதுரடி என்றால் எவ்வளவு விஸ்தீரணம் என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்து யார் பெயரில் உள்ளது. யாருக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது. 548/1 எத்தனை உட்பிரிவுகளாக பிரிந்துள்ளது என்று எனக்கு தெரியாது. எந்த உட்பிரிவின் கீழ் வழக்கு சொத்து உள்ளது என்றால் 548/1 என்று தெரியும், அதன் உட்பிரிவு எனக்கு தெரியாது. 548/1 சர்வே எண்ணுக்கு கோவில் பெயரில் சொத்துரிமை பத்திரம் எதுவும் இல்லை என்றால் சரிதான். சொத்துரிமையையே இல்லாத நான் சொத்தின் உரிமையாரான பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர்களுக்கு சொத்து பாத்தியப்பட்டுள்ளது என்பதை மறைத்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தற்போது வரை இசக்கியம்மன் கோவில் சொத்து என்று தான் நாங்கள் வணங்கி வந்தோம்.

4) தற்போது யாருடைய சொத்து என்றால் இசக்கியம்மன் கோவில் சொத்து. இசக்கியம்மன் கோவிலுக்கு சொத்து பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கு எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இசக்கியம்மன் கோவில் அறக்கட்டளையாகவோ, சங்கமாகவோ பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். வாதிகோவிலுக்காக நான் வழக்கு நடத்துவதற்கு நீதிமன்றத்தில் அனுமதி எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. கோவிலுக்காக வழக்கு தொடர எனக்கு உரிமை இல்லை என்றால் எங்கள் கோவில் நிர்வாக குழு சார்பாக 537 பேர் கையொப்பமிட்டு என்னை தேர்ந்தெடுத்துள்ளார்கள். 537 பேர் என்னை தேர்ந்தெடுத்தெடுத்தற்காக நான் நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் 537 பேர் கையொப்பமிட்டு 7 பேரை தேர்ந்தெடுத்து அந்த 7 பேரில் நான் ஒருவன். 537 பேர் என்னையோ, நான் கூறிய 7 நபர்களையோ தேர்ந்தெடுக்கவில்லை என்பதால் தான் நான் தேர்ந்தெடுத்தது சம்பந்தமான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5) எங்கள் ஊரில் முத்துதேவர் மகன் மாடசாமி என்பவர் உண்டு என்றால் சரிதான். வா.சா.ஆ 4 ல் கோட்டாட்சியர் விசாரணையில் மேற்படி மாடசாமி 2 வது நபர் என்றால் சரிதான். இந்த கோட்டாட்சியர் விசாரணையில் கூறிய மாடசாமிதான் முதலில் கூறிய ரிட் மனுவை தாக்கல் செய்துள்ளாரா என்றால் அவர் வேறு மாடசாமி. முத்துதேவர் மகன் மாடசாமி கொரானாவில் இறந்தார். வா.சா.ஆ 4 ஆவணத்தில் 2 வது நபராக கூறப்பட்டுள்ள மாடசாமி தான் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த மாடசாமி என்றால் சரியல்ல. சங்கர் சிமெண்ட் கம்பெனியுடன் இணைந்த கால்சியம் கார்பைடு தயாரிக்கும் கம்பெனியில் சுண்ணாம்பு உற்பத்தி செய்யும் கில்லனில் ஆப்பரேட்டராக பணிபுரிந்தேன்.

6) என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 7 ஆவணத்தை நான் தாக்கல் செய்தேனா என்றால் என் பெயரில் உள்ளது. என்னுடைய கையொப்பம் இல்லை. வா.சா.ஆ 7

ஆவணமானது கோட்டாட்சியர் உத்தரவு என்றால் சரிதான். அந்த உத்தரவு என்னை கட்டுப்படுத்தும் என்றால் சரிதான். அந்த உத்தரவில் 15 நாட்களில் ஆக்கிரமிப்பை அகற்றிவிட்டு அந்த தகவலை பதிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எனக்கு அது பற்றிய விவரம் எதுவும் தெரியவில்லை. அந்த உத்தரவிற்கு எதிராக மேல்முறையீடு செய்யவில்லை என்றால் மாவட்ட ஆட்சியரிடம் ஊர் மக்கள் சார்பாக மனு அளித்துள்ளோம். கோட்டாட்சியரிடம் கொடுத்த வாக்குமூலத்தை தாளில் எழுதிகொடுத்தார்கள். அதை கிழித்து போட்டுவிட்டு வந்தோம். சுமார் 20 பேர் அந்த வாக்குமூலத்தை கிழித்தோம்.

( பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)